MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only

# மலங்கரை கத்தோலிக்க சிறார் இயக்க தினம்



Printed Matter

பெப்ரவரி 09

To

BOOK POST

If Undeliveried please return to ...
Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165

Santhom Press, Diocese of Marthandam Mob : +91 94-42-469852

# Bulletin

Diocese of Marthandam

மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்



பெப்ரவரி 02

## மாயல்தோ – நம் ஆண்டவரின் தேவாலய நுழைவு

மலர் 21 பெப்ரவரி 2025 இதழ் 2

# Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 02.02.2025 | Sunday | 11.00 am<br>5.00 pm | Holy Mass & Baptism<br>Mission Visit | Coimbatore<br>Vaharai Dindukkal<br>on going Formation for Priests |
| 03.02.2025 - | Monday - | 10.00 am | On going formation for young priest | Bishop's House |
| 04.02.2025 | Tuesday | | On going formation for young priest | Bishop's House |
| 06.02.2025 | Thursday | 3.00 pm | Seminary Commission | Major Seminary - Nalanchira |
| 07.02.2025 | Friday | 4.00 pm | School Day | Anakkarai |
| 08.02.2025 | Saturday | 9.00 pm | World day of Consecrated life | Bishop's House |
| 09.02.2025 | Sunday | 8.00 am | Holy Mass | Pechiparai |
| 10.02.2025 | Monday | | UCC | Nagercoil |
| 11.02.2025 | Tuesday | 3.00 pm | Feast Mass | Kuravilangad |
| 13.02.2025 | Thursday | 7.00 am | Ordination | Pattom Cathedral |
| 14.02.2025 | Friday | 10.30 am<br>4.00 pm | CSL Anniversary<br>Marriage | Kuzhithurai<br>Kannacode |
| 15.02.2025 | Saturday | 9.30 am<br>12.00 pm<br>4.30 pm | Class<br>ECI-Bishop Consecration<br>College Day | MSWW, Bishop's House<br>Thalachanvilai<br>Community College, Mariagiri |
| 17.02.2035 | Monday | 8.30 am<br>10.00 am | Foundation Stone Laying<br>Co-ordination of the Commissions | DSS Convent, Soosaipuram |
| 18.02.2025 | Tuesday | 10.00 am<br>3.00 Pm | Graduation Day<br>Diocesan meet | MCC, Mariagiri<br>Biship's House |
| 20.02.2025 | Thursday | 10.00 am | College Day | MCC, Mariagiri |
| 21.02.2025 | Friday | 3.00 pm | School Day | Attoor |
| 22.02.2025 | | 10.00 am | Jubilee Celebration of Rev. Fr. Philip Chempakaseri | Minor Seminary Elavuvilai |
| 23.02.2025 -<br>28.02.2025 | Sunday -<br>Friday | | Annual Retreat | Venganoor |
| 28.02.2025 | Friday | 5.00 pm | School Day | Kulapparai |




# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்
# Marthandam Diocesan Bulletin

மலர். 22 பெப்ரவரி 2025 இதழ். 2


**Patron**
*His Excellency*
*Most Rev. Vincent Mar Paulos*

**Editor**
*Rev. Fr. Franklin Jose*
*The Chancellor*

**Cover Design**
*Mrs. Uni Kumari B.*

**Printing**
*Santhom Press,*
*Marthandam*

**Published By**
*The Chancellor*
*Diocese of Marthandam*




மலர். 22 ஜனவரி 2025 இதழ். 1



**Address :**

Bishop's House,
Diocese of Marthandam,
Marthandam P.O.,
K.K Dist. - 629 165

E-mail:mardiobulletin@gmail.com




# The Malankara Syrian Catholic Church
# Bulletin of the
# Diocese of Marthandam



மலர்.22 பெப்ரவரி 2025 இதழ்.2

## முக்கியமான நாட்கள்
### ஜனவரி 2025

- 01 இந்திய கடலோர காவல்படை தினம்
- 04 உலக புற்றுநோய் தினம்
- 09 பாதுகாப்பான இணைய நாள்
- 12 தேசிய உற்பத்தித்திறன் தினம்
- 13 உலக வானொலி தினம், உலக மகளிர் தினம்
- 20 உலக சமூக நீதி தினம்
- 21 சர்வதேச தாய்மொழி தினம்
- 22 உலக சிந்தனை தினம்
- 27 உலக என்ஜிஓ தினம்
- 28 தேசிய அறிவியல் தினம்

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | Circulars | 3-13 |
| 2. | கருணை இல்லம் | 14 |
| 3. | இளங்குருமடச் செய்திகள் | 14 |
| 4. | நற்செய்தி சங்கம் | 14 |
| 5. | எதிர்நோக்கின் ஜூபிலி ஆண்டின் நுழைவு வாசல் திறக்கும் நிகழ்வு | 15 |
| 6. | மறைபரப்பு தளச்செய்திகள் | 16 |
| 7. | Malankarai School of word and worship | 17 |
| 8. | MIDS | 18 |
| 9. | மலங்கரை கத்தோலிக்க சிறார் இயக்கம் (MCCL) | 20 |
| 10. | MCYM | 21 |
| 11. | MCA | 23 |
| 12. | கொமித்சியச் செய்திகள் | 24 |
| 13. | Health for One Million (Hom) | 25 |
| 14. | தாய்மார் சங்கம் (MCYM) | 26 |
| 15. | திருமண ஆயத்தப்பயிற்சி | 26 |
| 16. | மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரி | 27 |
| 17. | மறைவட்ட செய்திகள் | 28 |
| 18. | Hom - Special School for the Mentally Retarded | 31 |
| 19. | ஆயரின் ஜனவரி மாத நிகழ்வுகள் | 32 |
| 17. | இம்மாதம் நினைவு சுவர | 35 |
| 18. | Bishop's Diary | 36 |


*Printed by*
Santhom Press, Diocese of Marthandam. Mob : +91 94-42-469852



## THE SYRO-MALANKARA CATHOLIC CHURCH

MORAN MOR BASELIOS CARDINAL CLEEMIS
MajorArchbishop-Catholicos

Major Archiepiscopal Curia
Catholicate Centre
Pattom, Trivandrum - 695 004

Prot No CCL 1/2025 10.01.2025

### சுற்றறிக்கை

### காதோலிக்கா தினம் - 2025

***மேதகு ஆயர்களே, வணக்கத்திற்குரிய கோர் எப்பிஸ்கோப்பாமார்களே, றம்பான்மார்களே, மதிப்பிற்குரிய குருக்களே, திருத்தொண்டர்களே, இருபால் துறவிகளே, ஆண்டவரில் அன்பிற்குரிய*** *இறைமக்களே!*

அகில உலக திருச்சபையில் மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருச்சபை தன்னாட்சி அதிகாரமுள்ள உயர் பேராய திருச்சபையாக உயர்த்தப்பட்டு 20 ஆண்டுகள் நிறைவடைகிறது. இந்த தினத்தை காதோலிக்கா தினமாக 2025-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2-ம் நாள் கொண்டாடுகிறோம். நமது திருச்சபையை பராமரித்து வழிநடத்தும் கடவுளின் கருணையை நினைத்து திருச்சபையாக இணைந்து நன்றி கூறுவோம். “விண்ணுலகில் இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள்; என்றும் உள்ளது அவரது பேரன்பு” (திபா 136:26). நமது திருச்சபையை கடவுளின் கரங்களில் ஒப்புக்கொடுத்து மன்றாட காதோலிக்கா தினத்தில் தனிக்கவனம் செலுத்துவோம். திருச்சபையின் திருப்பணிகள் அனைத்தும் சிறப்புற நடைபெற இறைவேண்டல் செய்வோம். நம்பிக்கையுடனும் அற்பண உள்ளத்துடனும் திருச்சபையின் திருப்பணிகளில் ஆர்வமுடனும் செபத்துடனும் செயல்பட உறுதியெடுப்போம். காதோலிக்கா தினத்தின் ஆசீர்களை திருச்சபை மக்களுக்கு கூறிக் கொள்கிறேன்.

“எங்கள் ஆண்டவராகிய இயேசு மெசியாவே தூய திருச்சபையில் அமைதியும் சமாதானமும் நிலவச்செய்தருளும். கலக்கங்களும் பிரிவுகளும் ஏற்படாமலிருக்க அதனை அன்புடன் பாதுகாப்பீராக.

திருச்சபைக்கு சிலுவையின் நிழலில் அடைக்கலம் தந்தருள்வீராக. ஆசீர் மிக்க உமது திருக்கைகளால் அதனை ஆசீர்வதிப்பீராக. உமது திருமுகத்தைப் பார்ப்பதற்கு திருச்சபையின் கண்களுக்கு ஒளி தருவீராக" (கிரிதீபம்). நிரந்தரமாக திருச்சபைக்காக இறைவேண்டல் செய்த வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையின் செபமே இது. அவருடன் இணைந்து திருச்சபையை வலுப்படுத்த நாமும் இறைவேண்டல் செய்வோம். கடந்த ஆண்டில் இறையூழியர் மார் இவானியோஸ் ஆண்டகையை திருத்தந்தை பிரான்சிஸ் வணக்கத்திற்குரியவர் என்ற நிலைக்கு உயர்த்தினார். திருச்சபைக்கு வழங்கப்பட்ட இந்த ஆசீரை நினைத்து இறைவன்முன் தலைவணங்குவோம். நன்றி சொல்லுவோம். 1930-ல் நடந்த மறுவொன்றிப்பு, திருச்சபை சுய ஆட்சி அதிகாரமுள்ள உயர் பேராயத் திருச்சபையாக உருவாக்கம் பெற்றது, திருச்சபையின் தலைவர் உயர் பேராய காதோலிக்க பாவாவாக உயர்த்தப்பட்டது, அவருக்கு கர்தினால் பதவி கிடைத்தது, இவையாவற்றிலும் மார் இவானியோஸ் ஆண்டகையின் கனவுகள் நனவாயின.

ஏராளமானோரின் செபம், தியாகம் இவற்றின் விளைவே நமது திருச்சபையின் வளர்ச்சி. திருச்சபையின் திருத்தூதுப் பணிகளையும் சான்று வாழ்வையும் வலுப்படுத்திய பேராயர்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவிகள், பொதுநிலையினர் அனைவரையும் நன்றியுடன் நினைவு கூர்வோம். இறைவனின் திருமுன் அவர்களை ஒப்புக்கொடுத்து மன்றாடுவோம். திருச்சபையின் திருப்பணிகளுக்காக தங்களை அற்பணம் செய்திருக்கும் ஆயர்களையும், குருக்களையும், இருபால் துறவிகளையும், இறைமக்கள் சமூகத்தையும் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

அகில உலகத் திருச்சபை 2025-ம் ஆண்டை யூபிலி ஆண்டாக கொண்டாடுகிறது. "எதிர்நோக்கு ஏமாற்றம் தராது" (உரோ 5:5) என்ற உறுதிப்பாட்டை யூபிலி ஆண்டு நமக்குத் தருகிறது. திருத்தந்தையின்



இந்த அழைப்பை ஏற்றுக்கொள்வோம். "புனித ஆண்டில் எதிர்நோக்கின் திருப்பயணிகளாக பயணம் செய்வோம். இவ்வாறு நமது அழைப்பின் பொருளை அறிந்து தூய ஆவியின் வரங்களை பகிர்ந்து உலகில் கிறிஸ்துவின் கனவுகளை நனவாக்கி அவற்றிற்கு சாட்சிகளாக மாறுவோம். இறையன்பில் இணைந்து ஒரு குடும்பமாக உருவாக்கம் பெறுவோம்." எதிர்காலத்தைப் பற்றிய நிலையற்ற தன்மை சில வேளைகளில் முரண்பட்ட உணர்வுகள் வளர வழிவகுக்கலாம். இது உறுதியான நம்பிக்கையிலிருந்து அச்சத்தை நோக்கியதாகவோ நிறை அமைதியிலிருந்து கவலையை நோக்கியதாகவோ உறுதியான நம்பிக்கையிலிருந்து தயக்கத்தையும் சந்தேகத்தையும் நோக்கியதாகவோ இருக்கலாம். கிறிஸ்துவே நமது எதிர்நோக்கு. அவர் நம்மை ஏமாற்றத்தின் வாழ்வுக்கு அல்ல மாறாக எதிர்நோக்கு வாழ்வுக்கு அழைக்கிறார். யூபிலி ஆண்டு நம் வாழ்வுக்கு எதிர்நோக்கு தருகின்ற புது தொடக்கத்தின் ஆண்டாக அமையட்டும்.

2030-ம் ஆண்டில் மறுவொன்றிப்பின் நூற்றாண்டு விழாவை கொண்டாட இருக்கின்றோம். 2024-ம் ஆண்டுமுதல் ஒவ்வொரு ஆண்டும் வேறுபட்ட மையசிந்தனைகளை தேர்ந்தெடுத்து திருச்சபையை புதிதாக்கம் செய்யும் முயற்சியில் நாம் அனைவரும் பங்கேற்கின்றோம். இதன் முதற்படியாக 2024 செப்டம்பர் 20 முதல் 2025 செப்டம்பர் 19 வரை இறைவார்த்தை ஆண்டு அனுசரிக்கப்படுகிறது. இறைவார்த்தை வாயிலாக திருச்சபையை கட்டியெழுப்பி ஆற்றல்படுத்த எல்லாம் வல்ல கடவுள் நமக்காக அருளிய அருளின் ஆண்டு இது. உயிரளிக்கும் இறைவார்த்தைக்கு நெருக்கமாவோம். அதனை கற்றறிவோம். அது வழியாக இறைவார்த்தைக்கு சான்று பகர அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன். இறைவார்த்தை ஆண்டின் சிறப்பு நிகழ்வுகளில் திருச்சபை மக்கள் ஆர்வமுடன் பங்கேற்க வழிவகை செய்ய வேண்டுமென்று நினைவூட்டுகிறேன்.

நமது திருச்சபையின் 29-ம் ஆயர் மாமன்றம் 2025 மார்ச் 10 முதல் 14 வரை காதோலிகேட் மையத்தில் நடைபெறும். ஆயர் மாமன்ற ஆலோசனைகள் ஆசீர்மிக்கதாக அமைய அனைவரும் செபிக்க வேண்டுமென்று நினைவுபடுத்துகிறேன்.

மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருச்சபையின் திருப்பணிகள் அனைத்தும் ஆயர் மாமன்ற பணிக்குழுக்கள் வாயிலாக ஒருங்கிணைக்கப்படுகின்றன. இப்பணியை உயர் பேராய கூரியா அல்லது காதோலிக்கேட் மையம் செய்து வருகிறது. இதன் செயல்பாடுகள் திருச்சபை மக்களின் உளமார்ந்த உதவிகளால் நடைபெற்று வருகிறது. காதோலிக்கா தினக் காணிக்கையை நாம் இதற்காக செலவிட்டு வருகிறோம். காதோலிக்கேட் மையம் ஒருங்கிணைக்கும் திருப்பணிகளுக்கும் திருச்சபையின் பொதுப் பணிகளுக்கும் உங்கள் உளமார்ந்த உதவிகளை வழங்கிட அறிவுறுத்துகிறேன்.

மதிப்பிற்குரிய பங்குத் தந்தையர்கள் இறைமக்கள் சமூகத்திற்கு முன்னதாகவே இதனை தெரிவித்து உற்சாகப்படுத்த வேண்டும். பங்குகள் மட்டுமல்ல நமது நிறுவனங்கள் துறவற சமூகங்கள் அனைவரும் இந்த முயற்சியில் மனதாரப் பங்கேற்க வேண்டும். இந்தியாவுக்கு வெளியேயுள்ள திருச்சபை சமூகங்களும் இத்திட்டத்தில் பங்கேற்க வேண்டும். மறைமாவட்ட ஆயர்கள் தங்கள் மறைமாவட்டத்தில் வரும் காணிக்கைகளை சேமித்து ஆயர் மாமன்றத்தின் முடிவின்படி செலுத்த வேண்டிய தொகையை ஆயர் மாமன்ற கூடுகையில் சமர்ப்பிக்க வேண்டும். துறவற சமூகங்களின் தலைவர்களும், மாகாணத் தலைவர்களும் தங்கள் காணிக்கையை ஆயர் மாமன்றத்திற்கு முன் காதோலிக்கேட் மைய நிதி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். கடந்த ஆண்டில் இம்முயற்சியில் ஒத்துழைத்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.



காதோலிக்கா தினத்தில் திருப்பலிக்குப் பின் நம் பங்குகளிலும் நிறுவனங்களிலும் மறைபணித்தளங்களிலும் காதோலிக்கா கொடி உயர்த்தி காதோலிக்கா தின உறுதிமொழியை எடுக்க வேண்டும். இந்த நாளில் உலகில் பல்வேறு பகுதிகளில் நம் திருச்சபையின் திருப்பணிகளில் ஈடுபட்டிருக்கும் அனைத்து மேதகு ஆயர்களையும், அன்பிற்குரிய குருக்களையும், இருபால் துறவிகளையும் இறைமக்கள் சமூகத்தையும் மனதாரப் பாராட்டி நன்றியுடன் நினைத்து இறைவேண்டல் செய்கிறேன்.

கடவுளின் கருணையும், ஆசீரும் நிறைவாக உங்கள் மேல் பொழியப்படுவதாக.

இவண்,
இறைவனில் உங்கள் எளிய ஊழியன்,

+Baselios Cleemis

**✝ மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்**
உயர் பேராயர் மலங்கரை கத்தோலிக்கத்
திருச்சபையின் காதோலிக்கோஸ்

## மலங்கரை சுறியானி கத்தோலிலிக்கத் திருச்சபை

# MCCL தினம்

## பெப்ரவரி 09 ஞாயிற்றுக்கிழமை 2025

## (மலங்கரை கத்தோலிலிக்க சிறார் இயக்கம்)

### நம்பிக்கை பயிற்சிக்கான ஆயர் மாமன்ற பணிக்குழு தலைவரின் செய்தி

***மேதகு ஆயர்களே, கோர்எப்பிஸ்கோப்பாமார்களே, மதிப்பிற்குரிய அருட்தந்தையர்களே, துறவிகளே, மறைக்கல்வி ஆசிரியர்களே, பெற்றோர்களே, அன்புக் குழந்தைகளே,***

2025 பெப்ரவரி 9-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபையில் மலங்கரை கத்தோலிக்க சிறார் இயக்க தினம் கொண்டாடப்படுகிறது. "நம் ஆண்டவரும் மீட்பருமான இயேசுக் கிறிஸ்துவின் அருளிலும் அறிவிலும் வளர்ச்சி அடையுங்கள்" (2பேது 3:18) என்று, இறைவார்த்தை நமக்கு கற்பிக்கிறது. இறைமக்களின் தாயும் ஆசிரியையுமாக இருக்க கிறிஸ்துவுக்குள் அழைக்கப்பட்ட திருச்சபை தனது பிள்ளைகளை கிறிஸ்துவுக்குள் வளரச் செய்வதில் மிகுந்த ஆர்வம் காட்டுகிறாள். திருமுழுக்கு வாயிலாக திருச்சபை இறைமக்களை பெற்றெடுக்கின்றாள். இறையருளிலும் இயேசு கிறிஸ்துவைக் குறித்த அறிவிலும் அவர்கள் ஊட்டம் பெற துணை நிற்கிறாள். இந்த உணர்வை வாழ்நாள் முழுவதும் ஒரு நம்பிக்கையாளர் பெற்றுக் கொள்ள வேண்டும். எனினும் குழந்தைப் பருவத்திலேயே ஆண்டவரை அறியவும் பின்பற்றவும் பயிற்சி பெறும் தளமே மறைக்கல்வி அல்லது நம்பிக்கைப் பயிற்சி. கிறிஸ்துவுடன் நடத்தும் ஆள்நிலைசந்திப்பே நம்பிக்கை பயிற்சியின் நோக்கம் என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ். மேலும் ஆண்டவர் இயேசுவை கற்றறியவும் அவர் கற்பித்தவற்றை வாழ்க்கை நெறியாக புரிந்து கொள்ளவும் மட்டுமல்ல, அவருடன் ஆள்நிலை உறவை உருவாக்க நம்பிக்கைப் பயிற்சி உதவ வேண்டுமென்று திருத்தந்தை அறிவுறுத்துகிறார்.



மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபை தனது திருப்பணிகளுள் நம்பிக்கைப் பயிற்சியை மிக முக்கியத்துவம் வாய்ந்த பணியாகக் கருதுகிறது. இத்திருப்பணியை வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகை 'நம் ஆண்டவர் நமக்கு தந்த பணி' என்கிறார். மேலும் விதை விதைக்காத வயலிலிருந்து அறுவடை செய்ய இயலாது. அவ்வாறே தகுந்த காலத்தில் மறைக்கல்வி வழங்கப்படாத பங்குகளிலிருந்து இறைபக்தியும் அறநெறிவாழ்வும் கொண்ட குழந்தைகளை எதிர்பார்க்க முடியுமோ? என்று கேட்கிறார், வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகை. மறுவொன்றிப்பின் தொடக்க காலத்திலேயே மறைக்கல்விப் போதனை நமது திருச்சபையில் உருவாயிற்று. காலத்திற்கேற்ற மாற்றங்களைத் தருவதில் நமது திருச்சபைத் தலைமை தனிக்கவனம் செலுத்தியுள்ளது.

முறைப்படுத்தப்பட்ட பாட வகுப்புகள் வாயிலாக சிறுவர்களின் அறிவை வளரச் செய்வது மட்டும் நம்பிக்கைப் பயிற்சி ஆகாது. சிறுவர்கள் அவர்களுக்கே உரித்தான முறையில் திருச்சபை வாழ்வில் பங்கேற்கும் போது அவர்களுக்கு நம்பிக்கை அனுபவம் தோன்றி வளர்கிறது. ஆராதனை சமூகத்தில் அவர்களது பங்கேற்பை உறுதிப்படுத்த நாம் ஒரு போதும் தவறியதில்லை. நம்பிக்கையொளி அவர்களது வாழ்வின் பரிணாமங்களை ஒளிரச் செய்ய உதவும் வகையில் MCCL உதயமானது.

சிறுவர்கள் திருச்சபையின் பல்வேறு நிலைகளில் பங்கேற்கவும் தலைமைத்துவ பயிற்சி பெறவும், கலைத்திறனில் வளரவும், கிறிஸ்தவ சகோதரத்துவத்தில் வேரூன்றிய நட்புறவுகள் தோன்றவும், பிறரன்பு பணி போன்றவற்றிற்கான வாய்ப்புகளும் ஙஇஇக வழியாகக் கிடைக்கின்றன. நற்செய்தி மதிப்பீடுகளில் வளர அவர்களுக்கு இயல்கிறது. மறைக்கல்வி வகுப்புகளில் கிடைக்கும் அறிவுகளை அனுபவமாக மாற்றி சாட்சிகளாக வளர்வதற்கு வாய்ப்புகள் கிடைக்கின்றன. மறைக்கல்வி பாடதிட்டமும், திருவழிபாட்டு பயிற்சியும், ஙஇஇக வழங்கும் ஆளுமை வளர்ச்சியும் ஒருமித்து வரும் போது நம்பிக்கைப் பயிற்சி நிறைவடைகிறது.

MCCL உறுப்பினர்கள் சிறார்கள் மட்டுமே. ஆனால் கிறிஸ்தவத்தின் அடிப்படை வாழ்க்கை நெறிகளை கற்பிக்கும் பெற்றோர்களும், இறைசமூகத்தில் அறிவும் சான்றும் பகர்ந்திடும் மறைக்கல்வி ஆசிரியர்களும் இவ்வியக்கத்திற்கு உறுதுணையாக இருக்கின்றனர். அவர்களுடன் பங்குப்பணிகளில் வழிகாட்டுதல்கள் நல்கும் துறவியரையும், குருக்களையும் நன்றியுடன் நினைக்கின்றேன். மறைமாவட்டத்தில் சிறுவர்களை ஒன்றிணைத்து பயிற்சி அளிக்க எடுத்துக்கொள்ளும் பணிகளை நினைத்து திருச்சபையின் சார்பில் நன்றி கூறுகின்றேன். “என் வார்த்தையில் நிலைத்திருங்கள்” (யோவா 8:3) என்னும் மையச்சிந்தனையில் இறைவார்த்தை ஆண்டில் நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம். திருச்சபையின் பொதுஉணர்வுடன் இணைந்து திருவிவிலியம் வாசித்து உள்ளத்தில் பதிவு செய்வோம். திருச்சபையில் நடைபெறும் மறுமலர்ச்சியில் சிறார்களையும் பங்கேற்க வைப்போம். இறைவார்த்தையை தியான வாசிப்பு செய்ய பயிற்சி பெற நமக்கு உதவுகின்ற கங்ஸீற்ண்ர் ஈண்ஸ்ண்ய்ஹ முறையை பின்பற்றி புதுப்படைப்பாவோம். இறைவார்த்தை கற்பதும் பகிர்வதும் நம்பிக்கைப் பயிற்சியின் அடிப்படையாக உள்ளது. எழுதப்பட்ட வார்த்தையாகிய திருவிவிலியத்தை வாசிக்கவும் கற்கவும் வாழ்வாக்கவும் அனைவரும் இணைந்து முயற்சித்தால் நமது இறைசமூகத்திற்கும் குடும்பங்களுக்கும் ஆன்மீக நன்மைகள் மிகுதியாகக் கிடைக்கும். அதற்காக இறைவேண்டல் செய்கிறேன்.


திருச்சபையின் முயற்சிகளில் பங்கேற்கும் மறைக்கல்வி ஆசிரியர்களின் உதவி இறைவார்த்தை ஆண்டு செயல்திட்டங்களுக்கு மிக மிக அவசியம். இறைவார்த்தையை ஆழத்தில் கற்றறியும் பொருட்டு ஒழுங்குபடுத்தப்படும் வகுப்புகளிலும் பயிற்சிதிட்டங்களிலும் மறைக்கல்வி ஆசிரியர்கள் உற்சாகத்துடன் பங்கேற்க வேண்டும். அவ்வாறு செய்தால் அவர்களால் சிறார்களுக்கான பயிற்சிதிட்டங்களை தலைமையேற்று நடத்த முடியும். மறைமாவட்டங்களிலிருந்து தரப்படும்



வழிகாட்டுதலின்படி செயல்திட்டங்கள் வகுத்து செயல்பட முயல்வோம். நம்பிக்கையை பகிர்ந்து கொடுக்க அழைக்கப்பட்டவர்கள் என்ற முறையில் இத்திருப்பணியை இணைந்து செய்வோம்.

மறைமாவட்ட இயக்குநர்கள் மற்றும் பங்குத்தந்தையர்களின் வழிகாட்டுதலின்படி 2025 பெப்ரவரி 9-ம் நாள் தகுந்த நிகழ்வுகளுடன் MCCL தினம் கொண்டாட வேண்டுமென்று அறிவுறுத்துகிறேன். பாவசங்கீர்த்தனம், திருப்பலியிலுள்ள செயல்பாட்டு பங்கேற்பு, கூடுகை, பயிற்சிகள், இறைவார்த்தை ஆண்டின் சிறப்பு நிகழ்வுகள் போன்றவை MCCL தினக்கொண்டாட்டத்தில் இடம் பெறட்டும். சிறார்களை முறையான கிறிஸ்தவ வாழ்வுக்கு வழிநடத்தும் இத்திருப்பணியின் முக்கியத்துவம் திருச்சபையின் எல்லாத் துறைகளிலும் ஒளிர்ந்து காணப்பட MCCL தினக் கொண்டாட்டம் காரணமாகட்டும்.

*அன்புடன்,*



† மேதகு ஆயர் **தோமாஸ் மார் எவுசேபியோஸ்**
விசுவாச பயிற்சிக்கான ஆயர்மாமன்ற பணிக்குழு தலைவர்

**Most Rev.Vincent Mar Paulos**
Bishop of Marthandam

Bishop's House
Marthandam
K.K.Dist 629 165

Cir.No.1/2025

31.01.2025

## CIRCULAR

***அன்பான அருட்தந்தையர்களே, இருபால் துறவிகளே, இறைமக்களே!***

ஆண்டவர் இயேசுவின் இனிய நாமத்தில் அனைவரையும் வாழ்த்துகிறேன், ஆசி கூறுகிறேன். பெப்ரவரி மாதம் 2-ம் தேதி பல்வேறு காரணங்களினால் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. நம் ஆண்டவராகிய இயேசு தேவாலயத்தில் ஒப்படைக்கப்பட்ட திருநிகழ்வை நினைவுகூரும் நாள். அகில உலக திருச்சபையில் இந்த நாளில் துறவியர் தினம் கொண்டாடப்படுகிறது. திருச்சபையின் திருப்பணிகளில் இத்திருநிலையினர் ஆற்றும் பணிகள் சிறப்பானவை. இவ்வாழ்க்கை நிலைக்கு நம்முடைய பிள்ளைகளை ஊக்குவிக்க வேண்டியதும் நமது கடமை. குழுமமாக வாழ்ந்து கிறிஸ்துவுக்கு சான்று பகர துறவியர் அழைக்கப்படுகின்றனர். நமது மறைமாவட்டத்தில் பணியாற்றும் அனைத்து துறவியரையும் இத்தருணத்தில் மனதார பாராட்டுகிறேன், நன்றி கூறுகின்றேன். அவர்கள் பணிசிறக்க இறைவேண்டல் செய்கின்றேன். பெப்ரவரி மாதம் 2-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை நமது பங்குகளில் பணியாற்றும் துறவற குருக்களையும், அருட்சகோதரிகளையும் தகுந்த முறையில் கௌரவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அனைத்து துறவறத்தாரும் பெப்ரவரி மாதம் 8-ம் தேதி ஆயர் இல்ல அரங்கத்தில் வைத்து நடைபெறும் கூடுகைக்கு தவறாமல் வரும்படி அன்புடன் அழைக்கிறேன். இதை குறித்த கூடுதல் தகவல்களை துறவறத்தார் பணிக்குழு செயலர் உங்களுக்கு வழங்குவார்.



மேலும் இந்த நாளை மலங்கரை கத்தோலிக்க திருச்சபையில் காதோலிக்கா தினமாக கொண்டாடுகிறோம். இதைக் குறித்த சுற்றறிக்கை உங்களுக்கு கிடைத்திருக்கும் என நம்புகிறேன். இந்த ஞாயிற்றுக்கிழமை காணிக்கையை திருச்சபையின் பொது தேவைகளுக்காக காதோலிக்கேட் மையத்தில் ஒப்படைக்க வேண்டியது நமது கடமையன்றோ.

மேலும் பெப்ரவரி மாதம் 9-ம் தேதி நமது சபையில் MCCL (பாலர் சபை) தினம் கொண்டாடப்படுகிறது. நம்முடைய பிள்ளைகளை நற்குணப் பயிற்சியில் வளர்த்தும் இவ்வியக்கத்தின் செயல்பாடுகளுக்கு நன்கொடை வழங்க வேண்டியதும் நமது கடமையன்றோ. காதோலிக்கா தினத்திற்கான காணிக்கைகளையும் MCCL தினத்திற்கான நன்கொடைகளையும் பெப்ரவரி மாதம் 13-ம் தேதிக்குள் மறைமாவட்ட நிதி அலுவலகத்தில் செலுத்தும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

காதோலிக்கா தினக்காணிக்கை அடுத்து வரும் ஆயர் மாமன்ற கூடுகைக்குமுன் ஒப்படைக்கப்பட வேண்டும். எனவே இதில் தனிக்கவனம் செலுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இறை ஆசீர் உங்களோடு இறங்கி தங்குவதாக.

*அன்புடன்,*

**† மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ்**
மார்த்தாண்டம் மறைமாவட்டம்

# கருணை இல்லம் (Mercy Home)

மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் இரக்கச் செயல்களின் புதிய முகமான, நாகர்கோவில் மறைவட்டம், மந்தாரம்புதூரில் கட்டப்பட்ட, கருணை இல்லம் (Mercy Home), கடந்த ஜனவரி மாதம் 28-ம் நாள், மாலை சுமார் 5.00 மணியளவில், மறைமாவட்ட ஆயர் மேன்மை தங்கிய வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையில் ஆசீர்வதிக்கப்பட்டு, திறந்துவைக்கப்பட்டது. இவ்விழாவில் மறைமாவட்ட குருகுல முதல்வர், மறைமாவட்ட குருக்கள், மார்த்தாண்டம் மாகாணத் தலைவி, மறைவட்டத்தில் பணிபுரியும் துறவற கன்னியர்கள், பஞ்சாயத்து தலைவர், பங்கு மக்கள், ஊர் மக்கள் என பலர் கலந்துகொண்டனர். சிறப்பு விருந்தினர்களாக, இக்கட்டிடம் கட்ட பொருளாதார உதவிகள் பெரிதும் செய்த திருவாளர். அப்ரஹாம் குரியன் மற்றும் அவருடைய குடும்ப உறுப்பினர்கள் யாவரும் கலந்து கொண்டார்கள். ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட முதுயோருக்காக கட்டப்பட்ட இவ்வில்லம், அவ்வூரின் அணையா விளக்காய் ஒளிரட்டும்.

# இளங்குருமடச் செய்திகள்

- ஜனவரி மாதம் ஆறாம் தேதி அன்று நம் ஆண்டவரின் திருமுழுக்கு திருநாள் இளங்குருமடத்தில் வைத்து கொண்டாடப்பட்டது.
- தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள், ஜனவரி மாதம் 14-ம் நாள் எம் இளங்குருமடத்தில் கொண்டாடப்பட்டது. காலையில் திருப்பலியை தொடர்ந்து பொங்கல் விழா கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டது. குருமட சகோதரர்கள் மகிழ்ந்து கொண்டாடினர்.

# நற்செய்தி சங்கம்

மறைமாவட்ட அளவிலான நற்செய்தி சங்க வகுப்பானது ஜனவரி மாதம் 11-ம் தியதி அன்று தாபோர் தியான இல்லத்தில் வைத்து நடைபெற்றது. அருட்தந்தை ஜெனிற்றோ அவர்கள் இறைவார்த்தை ஆண்டு மற்றும் ஜூபிலி ஆண்டு பற்றி இறைவார்த்தை வழியாக வகுப்புகள் நடத்தினார். இதில் அனைத்து நற்செய்தி சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்



# எதிர்நோக்கின் ஜூபிலி ஆண்டின் நுழைவு வாசல் திறக்கும் நிகழ்வு

கிறிஸ்து பிறப்பின் 2025 ஆம் ஆண்டினை நினைவுகூறும் விதமாக 2025 ஜூபிலி ஆண்டின் நுழைவு வாசல் திறக்கும் நிகழ்வானது ஆம் ஆண்டை ஜூபிலி ஆண்டாகக் கொண்டாட திருத்தந்தை அறிவிப்பு விடுத்தார். ஜூபிலி ஆண்டு கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக ஜூபிலி ஆண்டின் நுழைவு வாசல் திறக்கும் நிகழ்வானது நமது கிறிஸ்து அரசர் பேராலயத்தில் வைத்து 05/01/2025 அன்று நடைபெற்றது. மேதகு ஆயர் வின்செண்ட மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையில் மறைமாவட்டத்தின் முதன்மை குருவும் மார்த்தாண்டம் பேராலயத்தின் பேரருட்தந்தை ஜோஸ் பிறைட் அவர்களும், மேரி மக்கள் கன்னியர் சபையின் தலைமை அருட்சகோதரி றோஸ் பிரான்சிஸ், திருத்தொண்டர் ஜெரோம் பீடச்சிறுவர்கள் மற்றும் இறைமக்கள் என அனைவரோடும் இணைந்து ஆயர் அவர்கள் எதிர்நோக்கின் திருப்பயணிகள் வாயிலை திறந்து வைத்தார். அதன் பின்னர் ஆயர் அவர்களும், முதன்மை குருவும் மற்றும் தலைமை அருட்சகோதரி அவர்களும் இணைந்து ஜூபிலி ஆண்டினை ஒளியை ஏற்றி துவங்கி வைத்தார்கள். ஜூபிலி ஆண்டின் துவக்க உரையாக மேதகு ஆயர் அவர்கள் எதிர்நோக்கின் திருப்பயணிகள் ஜூபிலி ஆண்டு பற்றிய மறையுரையை இறைமக்களுக்கு பகிர்ந்தார்கள். அதன் தொடர்ச்சியாக திருப்பலியானது. பேரருட்தந்தை ஜோஸ்பிறைட் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பேராலய இறைமக்கள் அனைவரும் பங்கு கொண்டு நிகழ்வினை சிறப்பித்தார்கள்.

# மறைபரப்பு தளச்செய்திகள்

## நல்லநாதபுரம் களக்காடு

- ✶ திருநெல்வேலி மாவட்டம் களக்காடு அருகாமையிலுள்ள நல்லநாதபுரம் மறைபரப்புத்தளத்தில் வைத்து கிறிஸ்துபிறப்பு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. தமிழர்கள் விழாவான பொங்கல் விழாவன்று விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் கொடுக்கப்பட்டு விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் J.J நகர் மறைபரப்புத்தளத்தில் உள்ள மக்களும் கலந்துகொண்டார்கள்.

## நைஸ்நகர் மறைபரப்புத்தளம்

- ✶ திருநெல்வேலி மாவட்டத்தில் வள்ளியூர் அருகில் நைஸ்நகர் மறைபரப்புத்தளத்தில் கிறிஸ்து பிறப்பு விழாவையொட்டி ஒருநாள் நற்செய்திப்பெருவிழா நடைபெற்றது. தமிழர்கள் விழாவான பொங்கல் விழாவன்று கோலப்போட்டி மற்றும் பல விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்பட்டது. மக்கள் அனைவரும் ஆர்வத்தோடு செயல்பட்டார்கள்.

## திருச்சி மறைபரப்புத்தளம்

- ✶ திருச்சி மாவட்டத்தில் ஓலயூர் என்னும் இடத்தில் உள்ள மறைபரப்புத்தளத்தில் மக்கள் ஒன்று கூடி கடவுளை ஆராதிக்க ஒரு தளம் கட்டப்பட்டு வருகின்றது. 18.01.2025 அன்று கூரை போடப்பட்டது.

## JJ நகர் களக்காடு

- ✶ திருநெல்வேலி மாவட்டம் களக்காடு அருகிலுள்ள J.J நகர் மறைபரப்புத்தளம் உள்ளது. 10 முதல் 15 குடும்பங்கள் ஆலயத்தில் ஞாயிறு திருப்பலிக்கு வருகை தந்து வருகின்றார்கள். 3 குடும்பத்தினர் முதன்முதலாக திருமுழுக்கு பெற தயாராகி உள்ளனர்.

## தேவதானப்பட்டி மறைபரப்புத்தளம்

- ✶ பெண்களுக்கான புனித தேவசகாயம் நெசவு தொழிற்கூடத்தின் கூடமானது 13.01.2025 அன்று மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகையால் ஆசீர்வதிக்கப்பட்டு திறந்து வைக்கப்படது.
- ✶ புனித தைநேசி மாதா மலங்கரை சத்தோலிக்க ஆலயம், தேவதானப்பட்டி, திருவிழாவானது 13.01.2025 அன்று மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்களால்



திருக்கொடியேற்றத்துடன். ஆரம்பிக்கப்பட்டு, 15.01.2025 அன்று முடிவடைந்தது.

- ✶ 14.01.2025 அன்று பொங்கல் திருவிழா விமரிசையாக கொண்டாடப்பட்டது. செருப்பாலூர் பங்கு மக்கள் அன்றைய தினம் வருகைதந்து பொங்கல் கொண்டாடி மகிழ்ந்தனர்.

# Malankarai School of word and worship

இறையியல் பட்டயப் படிப்பு சான்றிதழ் வழங்குதல், புதிய ஆண்டு இறையியல் பட்டயப் படிப்பு தொடக்க விழா மற்றும் திரு இசை பயிற்சி தொடக்க விழா ஆகிய இம்முன்று விழாக்களும் ஜனவரி மாதம் 18ஆம் தேதி அன்று ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. ஓர்த்தோடக்ஸ் சபையின் பேரருட்தந்தை. டாக்டர். எம்.பி. ஜார்ஜ் கோர் எப்பீஸ்கோப்பா அவர்கள் சிறப்பு விருந்தினராக இந்நிகழ்வில் கலந்து கொண்டு திருஇசை பற்றி வகுப்பு எடுத்தார்கள். அதனைத் தொடர்ந்து மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் பொதுக்கூட்டமானது நடைபெற்றது. நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை விபின்ஸ் வில்சன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். மறைமாவட்ட முதன்மை குரு அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். சிறப்பு விருந்தினரான பேரருட்தந்தை. டாக்டர். எம்.பி. ஜார்ஜ் கோர் எப்பீஸ்கோப்பா அவர்கள் சிறப்புரையாற்றி கடந்தாண்டு இறையியல் பட்டயப் படிப்பு முடித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கி சிறப்பித்தார்கள். இந்நிகழ்வில் சுமார் 26 பேர் இறையியல் பட்டைய படிப்பை முடித்து சான்றிதழை பெற்றுக் கொண்டனர். மலங்கரை திருச்சபையின் திருவழிபாட்டு பாடல்கள் அனைத்தையும் ஒப்பேழைகளாக்க உதவிய பேரருட்தந்தை. டாக்டர். எம்.பி. ஜார்ஜ் கோர் எப்பீஸ்கோப்பா அவர்கள் நம்முடைய மறைமாவட்ட ஆயர் அவர்களால் கௌரவிக்கப்பட்டார்கள். இந்நிகழ்வோடு இணைந்து புதிய ஆண்டிற்கான இறையியல் பட்டயப் படிப்பிற்கான துவக்க விழாவும், ஒரு மாத திருஇசை பயிற்சியும் தொடங்கப்பட்டது. இதில் ஏராளமானோர் பங்கெடுத்து பயிற்சியினை தொடங்கினார்கள்.

# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

## சிறு தொழில் உதவித்தொகை வழங்குதல்

குமரி மாவட்டத்தில் புற்றுநோயின் தாக்கம் கணிசமாக அதிகரித்து வருகிறது. இத்தகைய சூழ்நிலையில் புற்றுநோயிலிருந்து மீண்டு வந்து தங்கள் அன்றாட தேவைகளுக்காவது வருமானம் ஈட்ட வேண்டும் என்ற மன உளைச்சலில் இருக்கும் மக்களுக்கு மிட்ஸ் நிறுவனம் மிட்ஸ் ஜீவன் திட்டத்தின் கீழ் 'தாங்கும் விழுது' என்ற பெயரில் சிறுதொழில் துவங்க கைகொடுத்துள்ளது. அதன் துவக்கமாக, 03.01.2025 அன்று புற்றுநோயால் பாதிக்கப்பட்டு அதிலிருந்து மீண்டவர்கள் மற்றும் தற்போது சிகிட்சையில் இருக்கும் 54 நபர்களுக்கு சித்த மருத்துவர் விக்னேஷ் வீரபத்ரன் அவர்களால் இயற்கை உணவு மற்றும் அதன் நன்மைகள் குறித்து ஒரு மணிநேர பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த பயிற்சியினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் துவங்கி வைத்தார்கள். பயிற்சி நிறைவடைந்த பின் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் பயனாளிகளை ஊக்கப்படுத்தி சிறு தொழில் உதவித்தொகைக்கான காசோலைகளை வழங்கினார்கள். 54 பயனாளிகளுக்கு மொத்தம் ரூபாய் 4,93,000/- உதவித்தொகையாக வழங்கப்பட்டது.

## தளிர்கள் உலகம் – பொங்கல் விழா

தளிர்கள் உலகம் திட்ட பயனாளிகளுக்கான பொங்கல் விழா 11.01.2025 அன்று காலை 10 மணிக்கு மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் பொங்கல் விழாவின் முக்கியத்துவம் மற்றும் இந்த விழா எதற்காக கொண்டாடப்படுகிறது என்றும் மாணவர்களுக்கு எடுத்துரைத்து விழாவினை துவங்கி வைத்தார்கள். மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் முன்னிலையில் பொங்கல் பொங்கிய பின் அனைவருக்கும் பொங்கல் பரிமாறப்பட்டது. தொடர்ந்து மதியம் வரை சிறப்பு வகுப்புகள் நடைபெற்றன. மதியத்திற்கு பின் பண்டைகால விண்யாட்டுகளை நினைவூட்டும் வகையில் மாணவர்களுக்கும், அவர்களின் பெற்றோருக்கும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு விழாவானது நிறைவு பெற்றது. இந்த நிகழ்வுகளில் 51 மாணவர்களும் 52 பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

## உதவித்திட்டங்கள்

1. 11.01.2025 அன்று 4 பயனாளிகளுக்கு Billy Goat என்ற திட்டத்தின் வழியாக ஆடு வளர்ப்பதற்காக நபருக்கு ரூபாய் 8,000/- வீதம் மொத்தம் ரூபாய் 32,0000/- கடனாக வழங்கப்பட்டது.

2. 16.01.2025 அன்று விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக நாகர்கோவில் பணி மண்டலத்தின் 7 சுய உதவி குழுக்களில் உள்ள 28 உறுப்பினர்களுக்கு ரூபாய் 14,00,000/- கடனுதவி வழங்கப்பட்டது.

## பிற நிகழ்வுகள்

1. 06.01.2025 மற்றும் 07.01.2025 ஆகிய இரண்டு தினங்கள் விண்ணைத்தொடு திட்டத்தின் காலாண்டு மதிப்பாய்வு கூட்டம் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. இந்த கூட்டத்தினை CRS பணியாளர்கள் Ms. சஞ்சனா மற்றும் திருமதி. பியா ஆகியோர் நடத்தினர். இந்த கூட்டத்தில் நான்கு மறைமாவட்டங்களிலும் உள்ள விண்ணைத்தொடு திட்ட பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# மலங்கரை கத்தோலிக்க சிறார் இயக்கம் (MCCL)

மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் MCCL ஆண்டுவிழாவானது 26.01.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று 2.00 மணியளவில் தூய ஆவியின் பாடலுடன் ஆரம்பமானது. மார்த்தாண்டம் மறைவட்ட சிறார்கள் கௌமா சொல்லி விவிலியம் வாசிக்க MCCL முன்னாள் இயக்குனர் தந்தை ஜோஸ் அவர்கள் ஒயிலட்டப் போட்டியினை துவங்கி வைத்தார். ஒயிலாட்டப் போட்டியினைத் தொடர்ந்து 3.45 மணிக்கு மார்த்தாண்டம் மறைமாவட்ட குருகுல முதல்வர் மோண்சிஞ்ஞோர் ஜோஸ் பிறைட் அவர்கள் தலைமையிலும் ஒருங்கமைப்பாளர் அருட்சகோதரி கிறிஸ்டி மரியா முன்னிலையிலும் ஆண்டுவிழா ஆரம்பமானது. கொல்லங்கோடு மறைவட்ட சிறார்கள் இறைவணக்கம் பாடி விவிலிய வார்த்தைகள் படித்தனர். MCCL முன்னாள் இயக்குநர் தந்தை ஜோஸ் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். செயலர் திருமதி இராணி அறிக்கைப் படித்தார்கள். களியக்காவிளை, பனச்சமூடு, நாகர்கோவில், அழகியமண்டபம் சிறார்கள் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடத்தினர். MCCL குழுத்தலைவன் றிஜோலின் மற்றும் தலைவர் மோண். ஜோஸ் பிறைட் அடிகளார் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள். பின்னர் ஒயிலாட்டப்போட்டியில் வெற்றிபெற்ற சிறார்களான கிறிஸ்து விளாகம் முதல் பரிசும், மரியாகிரி இரண்டாம் பரிசும், கோணம் மூன்றாம் பரிசும் வழங்கப்பட்டது. பொருளர் திருமதி பெர்னந்தா அனைவருக்கும் நன்றி கூறினார். விழாவிற்கு சிறார்கள், வழிகாட்டிகள், மறைவட்ட இயக்குநர் தந்தையர்கள், அருட்சகோதரிகளும் கலந்து கொண்டனர். மார்த்தாண்டம் மறைவட்ட சிறார்கள் பாப்பரசர் கீதம் பாட விழா இனிதே நிறைவுற்றது. மார்த்தாண்டம் மறைவட்ட சிறார்கள் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்கள்.



# MCYM
## Youth Apostolate

### இளையோர் இயக்கத்தின் குளோபல் மீட்:

MCYM இயக்கத்தின் குளோபல் மீட் மார் இவானியோஸ் நகர், நாலாஞ்சிறையில் வைத்து நடைபெற்றது. இந்நிகழ்வானது திருவனந்தபுரம் மறைமாவட்ட இளையோர் இயக்கத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டது. இந்நிகழ்வில் கடந்த ஒரு ஆண்டு காலமாக நம்முடைய மறைமாவட்ட இளையோர் இயக்கம் சார்பாக செய்த அனைத்து செயல்பாடுகளும் அறிக்கையாக சமர்ப்பிக்கப்பட்டது. இந்நிகழ்வில் மறைமாவட்ட பொறுப்பாளர்களும் பங்கெடுத்தார்கள்.

### விளையாட்டுப்போட்டிகள்

மார்த்தாண்டம் மறைமாவட்ட MCYM இளையோர்களுக்கான வாலிபால் மற்றும் த்ரோபால் போட்டியானது சூரிய கோடு பள்ளி மைதானத்தில் வைத்து நடைபெற்றது. ஒவ்வொரு மறைவட்டங்களிலிருந்தும் முதல் பரிசு பெற்ற அணிகள் இந்த போட்டியில் பங்கேற்றன. ஆண்களுக்கான வாலிபால் போட்டியில் முதலிடத்தை பரிசு பனச்சமூடு மறைவட்டமும் இரண்டாம் இடத்தை களியக்காவிளை மறைவட்டமும் பெற்றன. பெண்களுக்கான த்ரோபால் போட்டியில் முதலிடத்தை பனச்சமூடு மறைவட்டமும் இரண்டாம் இடத்தை களியக்காவிளை மறைவட்டம் பெற்றன. இந்நிகழ்வினை அருட்தந்தை ஏசுதாஸ் பாத்திமாநகர் அவர்கள் ஜெபத்துடனும் துவங்கி வைத்தார் இறுதியில், அனைவருக்கும் பரிசினை அருட்தந்தை அஜீஷ் ஜோகான் அவர்கள் வழங்கினார்கள்.

### மாபெரும் பரிசுக் குலுக்கல்

மார்த்தாண்டம் மறைமாவட்ட இளையோர் இயக்கம் சார்பாக 27.10,2024 அன்று மாபெரும் பரிசுக் குலுக்கல் நிகழ்ச்சி நடைபெற்றது.

மறைமாவட்ட ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை ஜெஸ்டின் அவர்கள் தலைமையில் தலைவர் அஷ்பின் அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது. வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழக்கப்பட்டது.

### மழலைக்கு ஒரு போர்வை

மனுக்குலத்தின் மீட்பராகிய இயேசுவின் பிறப்பை முன்னிட்டு மழலைக்கு ஒரு போர்வை எனும் செயல்பாடு நிகழ்த்தப்பட்டது. இதன் அடிப்படையில் எல்லா அலகுகளும் ஒரு பரிசுபெட்டி தயாரித்து ஏழை எளியவர்களுக்கு உதவும் நோக்கில் உபயோகப்படுத்தாமல் இருக்கும் ஆடைகள் சேகரிகப்பட்டது. சேகரித்த ஆடைகள் அனைத்தும் மறைபரப்பு தளங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### ஆண்டிறுதி ஆட்சி மன்ற கூடுகை

மார்த்தாண்டம் மறைமாவட்ட மற்றும் அனைத்து மறைவட்ட செயல்பாடுகள் குறித்தான ஆண்டிறுதி ஆட்சிமன்ற கூடுகை 05.01.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று மதியம் 2.00 மணிக்கு MCYM அலுவலகம் குழித்துறையில் வைத்து நடைபெற்றது. துணைத்தலைவி மீனா இறைவணக்கம் பாட, செல்வன் அபிஷேக் அவர்களால் MCYM ஜெபம் கூறப்பட்டது. பொருளர் சோபியா அனைவரையும் வரவேற்றார். பின்னர் ஒவ்வொரு மறைவட்டங்களும் தங்கள் ஓராண்டு அறிக்கை சமர்ப்பித்தனர். மறைமாவட்ட செயலர் அருணா ஓராண்டு அறிக்கை சமர்ப்பித்தார். பொருளர் சோபியா ஓராண்டு வரவு செலவு கணக்குகள் வாசித்தார். பின்னர் அறிக்கைகளுக்கான விவாதங்களும் மதிப்பீடும் நடைபெற்றது. தலைவர் அஷ்பின் அவர்களால் வரும் ஆண்டிற்கான செயல்பாடுகள் பற்றி தெளிவாக எடுத்துரைத்தார். பின்னர் சபை அளவிலான செயலர் Sel Dinesh அனைவருக்கும் நன்றி கூற கூடுகை முடிவடைந்தது.



# MCA
## Diocese of Marthandam

மார்த்தாண்டம் மறைமாவட்ட MCA -யின் 2025 - 2026 ஆண்டுகளுக்காக புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழ உறுப்பினர்களின் பதவியேற்பு நிகழ்வானது 18.01.2025 அன்று மாலை 5 மணியளவில் ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. துவக்க செபத்திற்குப் பின் ஆயர் அவர்கள் திருச்சபையில் திருநிலையினர் மற்றும் பொதுநிலையினரின் பணிகள் பற்றியும் திருச்சபையில் இவ்விரு பிரிவினரும். சேந்தது பயணிக்க வேண்டியதின் அவசியத்தைப் பற்றி வகுப்பு நடத்தினார். பின்னர் நிர்வாகிகள் அனைவரும் உறுதிமொழி எடுத்து, விவிலியம் முத்தம் செய்து, ஆயரின் ஆசி பெற்று பதவி ஏற்றுக் கொண்டனர்,

### MCA சபாதல அசெம்பிளி– மாவேலிக்கரை

மலங்கரை கத்தோலிக்க இயக்கத்தின் சபை அளவிலான அசெம்பிளி மாவேலிக்கரை மறைமாவட்டத்தில் வைத்து ஜனவரி மாதம் 27 மற்றும் 28-ஆம் தேதி நடைபெற்றது. நமது மறைமாவட்ட மேலாண்மை குழு உறுப்பினர்கள் தலைவர் திரு. Y. வர்கீஸ் தலைமையில் கலந்து கொண்டனர். இயக்கத்தின் ஓராண்டு அறிக்கையை செயலார் திரு. K.C. பிரைட் அவர்களால் வாசிக்கப்பட்டது. இயக்கத்தின் ஆன்மீகத் தந்தை. அருட்தந்தை அர்னால்டு டயரஸ் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். 2025 மற்றும் 2026 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கான சபை அளவிலான நிர்வாகக் குழுவிற்கு நமது மறைமாவட்டத்தை சார்ந்த திரு. ராஜேந்திர பாபு அவர்கள் பொதுச் செயலாளர் தேர்வு செய்யப்பட்டது. நமது மறைமாவட்டத்திற்கு பெருமை சேர்த்தது. KMRM மூலமாக வழங்கப்படுகின்ற உதவித்தொகைகளுக்கு நமது மறைமாவட்டம் சரியாக தேர்வு செய்து சரியான முறையில் தொடர்ந்து வழங்கப்படுவதை KMRM ஒருங்கிணைப்பாளர் பாராட்டு தெரிவித்தார்.

மரியாயின் சேனை

# கொமித்சியச் செய்திகள்

### ✦ கொமிச்சிய ஆண்டுவிழா

மார்த்தாண்டம் மறைமாவட்ட கொகித்சிய ஆண்டுவிழாவானது கடந்த 12.01.2025 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிமுதல் மாலை 500 மணிவரை குழித்துறை மார் எஃப்ரேம் வளாகத்தில் வைத்து நடைபெற்றது.

சேனை ஆரம்ப ஜெபம் மற்றும் ஜெபமாலை கொமித்சிய செயலர் Sr. மேரி ராஜம் அவர்களால் ஆரம்பிக்கபட விழா இனிதே துவங்கியது. தொடர்ந்து மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டவை அவர்களால் 'விவிலியத்தில் அன்னை மரியா' என்ற தலைப்பில் கருத்துரை வழங்கப்பட்டது. கருத்துரையை தொடர்ந்து ஆண்டுவிழா பொதுங்கூட்டம் நடத்தப்பட்டது. இதற்கு மேதகு ஆயர் அவர்கள் தலைமை தாங்கினார்கள். சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட ரீஜியா தொடர்பாளர் Br. ரூஸ்வெல்ட் சேவியர் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். முன்னாள் கொமித்சிய தலைவர் Br. ஏசுராஜ் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள். இடை இடையே இடையே கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. சேனை இறுதிஜெயத்தை தொடர்ந்து ஆண்டு விழாவானது மாலை 5.00 மணியளவில் இனிதே நிறைவடைந்தது. இந்நிகழ்வில் கொமித்சிய ஆன்ம இயக்குநர் பேரருள்தந்தை மைக்கிள் முக்கம்பாலத் அவர்கள் மற்றும் 150-க்கு மேற்பட்ட சேனையாளர்களும் கலந்து கொண்டனர்.



# HEALTH FOR ONE MILLION (HOM)

## Diocese of Marthandam

தமிழக ஆயர் பேரவையின் நலவாழ்வு பணிக்குழு செயலர்களின் கூட்டம் 22.01.2025 அன்று திருச்சியில் வைத்து தமிழக ஆயர் பேரவையின் நலவாழ்வு பணிக்குழு தலைவர் மேதகு ஆயர் மார் ராஜேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மார்த்தாண்டம் மறைமாவட்டம் சார்பாக தமிழக ஆயர் பேரவையின் நலவாழ்வு பணிக்குழு செயலர் அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் கீழ் இயங்கும் மார்த்தாண்டம் மெடிக்கல் மிஷன் சார்பாக பேதுருவின் கரங்கள் என்னும் மாதாந்திர மருத்துவ உதவித்திட்டம் செயல்பட்டு வருகிறது. தற்போது 40 நிரந்தர நோயாளிகளுக்கு மாதம் 1,000/- ரூபாய் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. ஜனவரி மாதத்திற்குரிய உதவித்தொகை 20.01.2025 அன்று HOM அலுவலக வளாகத்தில் வைத்து அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்களால் வழங்கப்பட்டது.

Health for One Million நிறுவன பணியாளர்களுக்கான வருடாந்திர நற்கருணை தியானம் 03.01.2025 அன்று குழித்துறை மார் எப்ரேம் வளாகத்திலுள்ள தியான நிலையத்தில் வைத்து HOM இயக்குநர் அருட்தந்தை அருட்தந்தை அஜீஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. அருட்தந்தை பாஸ்கர் அவர்கள் தியான உரையாற்றினரர்கள். HOM பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

# தாய்மார் சங்கம் (MCMF)

தாய்மார் சங்கத்தின் (MCMF) கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் (ஹேத்வதா 2k24) மற்றும் மருத்துவ உதவி வழங்கும் நிகழ்வுகள் 22.12.2024, ஞாயிற்றுகிழமை பிற்பகல் 2.30 மணியளவில் உண்ணாமலைக்கடை புனித சூசையப்பர் ஆலய வளாகத்தில் வைத்து நடைப்பெற்றது. மறைமாவட்ட மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் அவர்கள் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிக்கு தலைமை ஏற்று கிறிஸ்துமஸ் செய்தி வழங்கினார்கள், மாகாண தலைவி மதர் றோஸ் பிரான்சிஸ் சிறப்புரை வழங்கினார்கள் . ஒவ்வொரு மறைவட்டத்திற்கு இரண்டு கலைநிகழ்ச்சிகள் என்ற முறையில் தாய்மார்களின் கலைநிகழ்ச்சிகள் நடைப்பெற்றது. ஒவ்வொரு மறைவட்டத்திலிருந்து ஒவ்வொரு கேன்சர் நோயாளி (ஒரு நபர்) தேர்ந்தெடுக்கப்பட்டு ரூபாய் 3000 வழங்கப்பட்டது. கிறிஸ்துமஸ் விழாவிற்கு சுமார் 250 தாய்மார்கள் கலந்துக்கொண்டார்கள். பாப்பரசர் கீதத்துடன கிறிஸ்துமஸ் நிகழ்ச்சி இனிதே முடிந்தது

## திருமண ஆயத்தப்பயிற்சி

**2025 பெப்ரவரி** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் **14, 15** ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.



# மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரி கிராத்தூர்

## பொங்கல் விழா

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டம் கல்வியியல் கல்லூரியில் 10.01.2025 அன்று பொங்கல் விழாவானது கொண்டாடப்பட்டது. இவ்விழாவானது காலை 9.30 மணியளவில் கல்லூரி முதல்வர் முனைவர் ஏஞ்சல் பெலிக்ஸ் அவர்கள் பொங்கல் விழாவினை துவக்கி வைத்தார். இவ்விழாவில் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மதியம் 2.00 மணியளவில் பொங்கல் விழா பொதுக்கூட்டமானது இறைவணக்கப்பாடலுடன் ஆரம்பமானது. அருட்தந்தை. பொ்னார்டு; அடிகளார் (தாளாளர்/செயலர்) அவர்கள் இவ்விழாவிற்கு தலைமை உரையாற்றினார். இவ்விழாவின் இடையிடையே கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## குடியரசு தினவிழா

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டம் கல்வியியல் கல்லூரியில் 24.01.2025 அன்று குடியரசு தின விழாவானது மதியம் 2.00 மணியளவில் கொண்டாடப்பட்டது. அருட்தந்தை பொ்னார்டு; அடிகளார் (தாளாளர்/ செயலர்) அவர்கள் இவ்விழாவிற்கு தலைமை வகித்து தலைமை உரையாற்றினார். இவ்விழாவின் இடையிடையே பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இதில் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

## விளையாட்டு மற்றும் கலாச்சார போட்டிகள் (Sports and Cultural Meet 2025)

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டம் கல்வியியல் கல்லூரியிலிருந்து 25.01.2025 அன்று C.S.I. பொறியியல் கல்லூரியில் (C.S.I. Polytechnic College, Marthandam) வைத்து நடைபெற்ற விளையாட்டு போட்டி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு குழு நடனத்திற்கு இரண்டாம் பரிசினை வென்று, காசோலை ரூ. 2000/- கிடைக்கப்பெற்றது.

# மறைவட்ட செய்திகள்

## குலசேகரம் மறைவட்டம்

1. சாரூர், இயேசுவின் திரு இருதய ஆலய கட்டுமான பணிகளில் சிறுவர் முதல் முதியவர் வரை இணைந்து கட்டுமானத்திற்காக தன்னார்வமாய் முன்வந்து உதவினார்கள். ஜனவரி 12 அன்று சாரூர் ஆலய கட்டுமானத்திற்கு துணை நின்றனர்.
2. ஜனவரி 12-ஆம் தேதி வண்ண கோலமிட்டு பொங்கல் செய்து விளையாட்டுப் போட்டிகள் நடத்தி மாத்தார் ஆலய இறை மக்கள் பொங்கல் விழாவை கொண்டாடினர்.
3. செருப்பாலூர் பங்கு மக்கள் ஆன்மீக பயணமாக வேளாங்கண்ணி சென்றனர். போகும் வழியில் நமது மறைபரப்பு தளமான தேவதானப்பட்டி மக்களுடன் இணைந்து பொங்கல் கொண்டாடினர்.

## பனச்சமூடு மறைவட்டம்

பனச்சமூடு மறைவட்ட மேய்ப்புப்பணி அறிவுரைக்குழுக் கூட்டம் 05.01.2025 ஞாயிறு பிற்பகல் 03:00 மணிக்கு பளச்சமூடு, புனித சூசையப்பர் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு நம்மறைவட்டத்தில் பணிபுரியும் அனைத்து அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகள், அனைத்து பங்குகளின் செயலர், பொருளர், மறைக்கல்வி தலைமை ஆசிரியர் மற்றும் செயலர், பங்கில் செயல்படும் இயக்கங்களின் (M.C.Y.M. M.C.A. தாய்மார்சங்கம், மரியாயின் சேனை, வின்சென்ட் தே பவுல்) தலைவர் & செயலர், மறைவட்ட மற்றும் மறைமாவட்ட மேய்ப்புப்பணிக் குழு பிரதி நிதிகள் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துக்கள் வழங்கி சிறப்பித்தனர்.

பனச்சமூடு மறைவட்ட மலங்கரை கத்தோலிக்க இயக்க மேலாண்மை குழு கூட்டம் ஜார்ஜ் நகர் ஆலயத்தில் வைத்து 12.01.2025 அன்று பிற்பகல் 2 மணிக்கு தலைவர் Y. வர்கீஸ் தலைமையில் ஆன்மீக இயக்குனர் மற்றும் ஜார்ஜ் நகர் பங்கு தந்தை ஆகியோர்களின் முன்னிலையில் நடைபெற்றது.



## நாகர்கோவில் மறைவட்டம்

### மறைவட்ட மேய்ப்புப்பணி அறிவுரைக்குழு கூடுகை

நாகர்கோவில் மறைவட்ட மேய்ப்புப்பணி அறிவுரைக்குழு கூடுகையானது, கடந்த ஜனவரி திங்கள் 26-ம் நாள் (ஞாயிற்றுகிழமை), பிற்பகல் சுமார் 2.30 மணியளவில், பெருவிளை தூய தேவசகாயம் திருத்தல வளாகத்தில், மறைவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை ஜாண் குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மறைவட்ட குருக்களான அருட்தந்தை ராபர்ட், அருட்தந்தை அபின்சன், அருட்தந்தை அஜீஷ் ஜோகன், அருட்தந்தை சுனீஷ் குமார், மறைவட்ட எல்லைக்குட்பட்ட அனைத்து துறவற இல்ல தலைவிகள், அனைத்து பங்குகளின் செயலர், பொருளர், பங்குகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள், பக்த இயக்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### விவாதப்பொருள்

1. பொதுக்கல்லறைத் தோட்டம்
2. பொதுநிலையினரிலிருந்து செயலர் மற்றும் பொருளர் தேர்ந்தெடுத்தல்.
3. பக்த இயக்கங்களின் வளர்ச்சி பற்றிய ஆய்வு
4. பங்கில் செயல்படும் இயக்கங்கள் பற்றிய ஆய்வு
5. விவிலிய ஆண்டு ஆய்வு
6. திருத்தல வளர்ச்சி
7. மறைவட்ட நிதி மேம்பாடு
8. மறைமாவட்ட நிதி நிலையம் (Bank)
9. தொழிலாளர்களை ஒருங்கிணைத்தல்
10. அரசு நலத்திட்டங்கள்

மேற்கண்ட விவாதங்களின் நேர்மறை பகிர்வின்படி, மறைவட்ட வளர்ச்சிக்கான புதிய வாய்க்கால் திறக்கப்பட்டதாக யாவராலும் உணரப்பட்டது. மறைவட்ட மேய்ப்புப்பணி அறிவுரைக் குழுவின் செயலராக தேனிக்குளம் பங்கைச்சார்ந்த திருமதி. ஜெனிபர் அவர்களும், பொருளாராக

ஆனப்பொற்றை பங்கைச் சார்ந்த திரு. சுமன் அவர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

### தூய தைநேசி மாதா திருத்தல தேவாலய திருவிழா

நாகர்கோவில் மறைவட்டத்தின் கலங்கரை தீபமாய் வீற்றிருக்கும் தூய தைநேசி மாதா திருத்தல தேவாலயத்தின் திருவிழாவானது, கடந்த ஜனவரித் திங்கள் 11 முதல் 15 வரை வெகு விமரிசையாக நடைபெற்றது. மறைவட்ட குருக்கள் மற்றும் திருத்தல தேவாலயத்தை ஆன்மீகப் பாதையில் கட்டியெழுப்பிய அனைத்து முன்னாள் பங்குத் தந்தையர்களின் வருகை, திருவிழாவை மேலும் மெருகூட்டியது. தைநேசி மாதாவின் அரவணைப்பில், ஆன்மீக ஒளி ஆடம்பரமாக தலைவிரித்தாடிய இத்திருவிழாவில், கத்தோலிக்கர் அல்லாத பல இன மக்கள் பங்கேற்று இறையாசீர் பெற்றனர்.

## களியக்காவிளை மறைவட்டம்

களியக்காவிளை மறைவட்ட இளையோர்களுக்கான ஆண்களுக்கான Volleyball மற்றும் பெண்களுக்கான Throwball போட்டியானது 18/01/2025 சூரியகோடு மைதானத்தில் வைத்து நடைபெற்றது. சுமார் 6 அணிகள் இந்த போட்டியில் கலந்து கொண்டன. பெருவாரியான இளையோர்கள் இந்த போட்டியில் பங்கேற்று சென்றனர். இதில் ஆண்களுக்கான Volleyball போட்டியில் மரியகிரி முதலிடத்தையும் சூரியகோடு இரண்டாம் இடத்தையும் பெண்களுக்கான Throwball போட்டியில் மரியகிரி முதலிடத்தையும் சூரியகோடு இரண்டாம் இடத்தையும் தட்டிச்சென்றது. போட்டிகளை அருட்தந்தை ஜோஸ் அவர்கள் ஜெபத்துடன் தொடங்கி வைத்தார். இறுதியாக களியக்காவிளை மறைவட்ட முதன்மை குரு அவர்கள் வாழ்த்துக்கள் கூறி வெற்றியாளர்களுக்கு பரிசுகளை வழங்கி விழாவினை நிறைவு செய்தார்.

தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவினை சிறப்பிக்கும் விதமாக களியக்காவிளை மறைவட்ட இளையோர் இயக்கம் சார்பாக பொங்கல் விழாவானது மங்காடு தேவாலயத்தில் வைத்து கொண்டாடப்பட்டது. மறைவட்டத்தில் உள்ள 8 அலகுகள் இதில் பங்கேற்றன.



ஒவ்வொரு பங்கும் மிகவும் அருமையாகவும் தத்ரூபமாகவும் கோலங்கள் வரைந்து பொங்கலை சிறப்பாக கொண்டாடினார்கள். இந்த போட்டியினுடைய முடிவிலேயே முதலிடத்தை கோயிக்கல்தோப்பு தேவாலயமும் இரண்டாம் இடத்தை சூரியகோடு தேவாலயமும் மூன்றாவது இடத்தை மங்காடு தேவாலயமும் தட்டி சென்றன. மறை வட்டத்தில் உள்ள அனைத்து குருக்களும் இந்நிகழ்வில் வந்து கலந்துகொண்டு இளையோர்களை உற்சாகப்படுத்தினார்கள். மறைவட்ட முதன்மை குரு தந்தை அவர்கள் இறுதியாக இளையோர்களுக்கு பொங்கல் தின வாழ்த்துக்களை கூறி வெற்றியாளர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

## HOM - SPECIAL SCHOOL FOR THE MENTALLY RETARDED

### பொங்கல் விழா

தமிழர் திருநாளாம் பொங்கல் விழா HOM சிறப்புப்பள்ளியில் 10.01.2005 அன்று சிறப்பிக்கப்பட்டது. புதுப்பானை அலங்கரித்து வண்ணக் கோலமிட்டு சிறப்புக் குழந்தைகளின் பொங்கலோ பொங்கல் வாழ்த்தொலிகளுடன் பொங்கலிடப்பட்டது. இந்நிகழ்வில் சிறப்புக் குழந்தைகள், பணியாளர்கள் மற்றும் படுக்கை நோயாளிகள் பராமரிப்பு பணியாளர்கள் குழுமம் என சுமார் 50 க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். HOM இயக்கத்தின் கண்காணிப்பாளர் அருட்சகோதரி ஐஸ்வர்யா, DSS அவர்கள் தலைமை தாங்கி பொங்கல் தின உரை நிகழ்த்தி அனைவருக்கும் பொங்கல் பரிமாறினார்கள். நிர்வாக அலுவலர் Ms. மெரின் அவர்கள் நிகழ்ச்சியின் அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக ஒழுங்குபடுத்தியிருந்தார்கள்.

# ஆயரின் ஜனவரி மாத நிகழ்வுகள்



- 2 ➢ திருச்சபையின் தந்தையும் தலைவருமாகிய மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ் காதோலிக்கா ஆண்டகை அவர்களின் நாம விழா நன்றித் திருப்பலியில் கலந்து கொண்டார்.
- 2 ➢ இளமாடு ஆலயத்தில் திருமண அருட்சாதனம் வழங்கினார்.
- 2 ➢ மாவேலிக்கரை மறைமாவட்டம் செறியநாடு ஆலயத் திருவிழாவில் கலந்து கொண்டு திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.
- 3 ➢ மரியாகிரி ஆலயத்தில் அருட்தந்தை தேவதாஸ் அவர்களின் குருத்துவ வாழ்வின் வெள்ளி விழாவை, திருப்பலியில் கலந்து கொண்டு மறையுரை வழங்கி, ஜூபிலியின் வாழ்த்துகளை தெரிவித்தார்.
- 4 ➢ மார்த்தாண்டம் பேராலயத்தில் அருட்தந்தை பத்றோஸ் அவர்களின் குருத்துவ வாழ்வின் வெள்ளி விழா திருப்பலியில் கலந்து கொண்டு மறையுரை வழங்கி, ஜூபிலியின் வாழ்த்துகளை தெரிவித்தார்.



- 5 ➢ மார்த்தாண்டம் பேராலயத்தில் யூபிலி ஆண்டின் 'எதிர் நோக்கின் வாசலை' திறந்து வைத்து, 'எதிர்நோக்கின் ஒளியேற்றி, மறையுரை ஆற்றினார்.
- 5 ➢ அம்பிலிகோணம் ஆலயத்தில் சிற்றாலத்திற்கான அடிக்கல்லை ஆசீர்வதித்து அடிக்கல் நாட்டினார்.
- 5 ➢ மஞ்சத்தோம்பு ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி, புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.
- 6 ➢ ஆதிச்சவிளாகம் ஆலயத்தில் திருமண அருட்சாதனம் நிறைவேற்றினார்.
- 7 ➢ கோட்டயம் புனித தோமையார் உயர் குருமடத்தின் பட்டமளிப்பு விழாவில் தலைமையேற்று பட்டங்களை வழங்கினார்.
- 10 ➢ கிராத்தூர் மார் கிரிகோரியோஸ் உயர்நிலைப் பள்ளியின் ஆண்டுவிழாவில் கலந்துகொண்டு தலைமையுரையாற்றினார்.
- 11 ➢ நாலாஞ்சிறை SIC கன்னியர் இல்லத்தில் Sr. Eymad ஆன்ம இளைப்பாறுதலுக்காக திருப்பலி நிறைவேற்றினார்.
- 12 ➢ செல்லங்கோணம் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.
- 12 ➢ மரியாயின் சேனை கொமிசிய ஆண்டுவிழாவில் கலந்து கொண்டு தலைமையுரையாற்றினார்.
- 13 ➢ பின்குளம் ஆலயத்தில் திருமண அருட்சாதனம் நிறைவேற்றினார்.
- 13 ➢ தேவதானப்பட்டி மறைபரப்பு தளத்தில் தொழிற்கூடத்தை அர்ச்சித்து திருவிழா திருப்பலியும் நிறைவேற்றினர்.
- 14 ➢ பெருவிளை புனித தேவசகாயம் திருத்தலத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.
- 14 ➢ நட்டாலம் புனித தேவசகாயம் திருத்தலத்தில் திருப்பலி நிறைவேற்றி திருவிழா கொடியிறக்கி ஆசீர்வதித்தார்.
- 15 ➢ நாலாஞ்சிறை ஆலயத்தில் திருமண அருட்சாதனம் நிறைவேற்றினார்.

16 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்ட மறைக்கல்வி ஆசிரியர் சங்கமத்தில் ஆசிரியர்களுக்கு கருத்துரை வழங்கி, 25 ஆண்டுகளாக மறைக்கல்வி கற்பித்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்களை கௌரவித்தார்.

18 ➢ Malankarai School of Word and Worship மற்றும் திருஇசை பயிற்சிக்கான புது ஆண்டு துவக்க விழாவில் தலைமையேற்று கடந்த ஆண்டு தேர்ச்சி பெற்றவர்களுக்கு பட்டமளித்து ஆசீர்வதித்தார்.

19 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்ட மறைக்கல்வி மாணவர் சங்கமத்தில் திருப்பலி நிறைவேற்றி மறையுரை வழங்கி ஆசீர்வதித்தார்.

20 ➢ மார்த்தாண்டம் மேரிமக்கள் துறவற இல்லத்தில், துறவற வாழ்வின் வெள்ளி விழா மற்றும் பொன்விழா கொண்டாடும் அருட்சகோதரிகளுக்காக நன்றித் திருப்பலி நிறைவேற்றி ஜூபிலியின் வாழ்த்துகளை தெரிவித்தார்.

21 ➢ தமிழ்நாடு ஆயர்பேரவை கூட்டத்தில் கலந்து கொண்டார்.

24 ➢ மரியாகிரி ஆலயத்தில் திருமண அருட்சாதனம் நிறைவேற்றினார்.

25 ➢ மாடத்தட்டுவிளை புனித செபஸ்தியார் தேவாலயத்தில் மாலை செபத்தை வழிநடத்தி மறையுரை வழங்கினார்.

26 ➢ திருவல்லா மறைமாவட்டம் கல்லுசேரி ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையசீர் பொழிந்தார்.

28 ➢ மந்தாரம்புதூரில் புதிதாக கட்டப்பட்ட கருணை இல்லத்தை (Mercy Home) ஆசீர்வதித்து திறந்து வைத்தார்.

29 ➢ மாவேலிக்கரை மறைமாவட்ட ஆயர் மேதகு ஜோசுவா மார் இக்நாத்தியோஸ் ஆண்டகையின் நாமவிழா நன்றித் திருப்பலியில் கலந்துகொண்டார்.




## இம்மாதம் நினைவு கூர

பெப்ருவரி 2025

2 – தனஹாவுக்குப் பின் நான்காம் ஞாயிறு
மாயல்த்தோ (நம் ஆண்டவரின் தேவாலய நுழைவு)
காதோலிக்கா தினம்

3 – மார் சிமியோன், மார்த்தா அன்னா

4 – புனித ஜாண் பிரிட்டோ



4

9 – தனஹாவுக்குப் பின் ஐந்தாம் ஞாயிறு
ஆபிரகாம் மார் யூலியோஸ் ஆண்டகையின் ஆயர் திருநிலைப்பாடு
மலங்கரை கத்தோலிக்க பாலர் சபை தினம்

10 – மூன்று நோன்பு ஆரம்பம்
மலங்கரை கத்தோலிக்க உயர் பேராய திருஆட்சிப்பீடம் நிறுவப்பட்ட நாள்



11

11 – புனித லூர்து அன்னை

13 – மூன்று நோன்பு முடிவு
இறைவாக்கினர் ஆகாய்

14 – மார் க்சுஸ்தோஸ்

16 – கொஹனே ஞாயிறு (குருக்களின் நினைவு)



19

19 – மார் ஈசாக்கு
ஜோசப் மார் தோமஸ் ஆண்டகையின் ஆயர் திருநிலைப்பாடு

22 – தோமஸ் மார் தியோஸ்கோறஸ் ஆண்டகையின் நினைவு
திருத்தூதர் பேதுருவின் அந்தியோக்கியா திருஆட்சி பீடம் நிறுவிய நாள்
திருவனந்தபுரம் பேராலயம் அர்ச்சிக்கப்பட்ட நாள்

23 – ஆனிதே ஞாயிறு (விசுவாசிகளின் நினைவு)
சிமிர்ணாவின் புனித போளிக்கார்ப்
மேத்யூஸ் மார் போனிகோர்போஸ் ஆண்டகையின் பெயர்விழா

24 – திருமுழுக்கு யோவானின் தலை கண்டெடுக்கப்பட்ட நாள்

25 – அருளாளர் ராணி மரியா

28 – இறைவாக்கினர் ஒபதியா


ஜூபிலி ஆண்டின் நுழைவு வாசல் திறக்கும் நிகழ்வு


Malankara School of Word & Worship


Mercy Home Opening


குருமட பொங்கல் விழா


MCYM Global Meet


MCCL ஆண்டுவிழா


MCA


MCYM


மறைவட்ட செய்திகள்


மறைபரப்புத்தளச் செய்திகள்


Health for One Million


MIDS


HOM Special School